**வெலிகேபொல பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெலிகேபொல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் வெலிகேபொல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னை ஆண்டில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் 1.4.1 (அ) பந்தி தவிர என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைதகும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கிடைத்த கூட்டுத் தொகை ரூபா 9,835,526 ஆன நிதியை மூலதன பெறுவனவாக கணக்கீடு செய்துள்ளமையால் பற்றாக்குறை அப்பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | கடன் நிதிய பெறுவனவை கடன் கணக்கு மூலம் சீராக்கம் செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் கைத்தொழில் வரிப் பணம் ரூபா 1,136,550 என கணக்குகளில் காட்டிய போதும், ஆண்டிற்குரிய பில்லிடலை இனங்கண்டு அட்டுறு பெறுமானத்தை கணக்குகளில் காட்டியிருக்கவில்லை. | கணிப்பீட்டின் மூலம் இனங்கண்ட அனைத்து அனுமதிப்பத்திர மற்றும் கைத்தொழில் வரிப் பணத்தையும் அறவிட்டுள்ளதாகவும், நிலுவை இலலையென. | ஆண்டிற்குரிய பில்லிடலை இனங்கண்டு அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்க வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுகள் பிரகார மீதிகளுடன் துணை ஏடுகள் பிரகார மீதிகளுக்கிடையில் ரூபா 941,120 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | வித்தியாசமொன்று ஏற்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் ஆண்டு கணக்கீடு செய்கையில் சரி செய்வதாக. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் துணை ஏட்டு மீதிகளுடன் இணங்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| கூட்டுத் தொகை ரூபா 4,500,000 ஆன கணக்கு விடயமொன்று தொடர்பாக கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படவில்லை. | கட்டிடத்தின் பகுதிகள் அகற்றப்பட்டதாகவும், மதிப்பீட்டறிக்கை ஒன்றை பெற்றுக் கொள்ள முடியவில்லை எனவும், முழு கட்டிடத்தையும் அகற்றிய பின்னர் கணக்கீட்டு பெறுமதியை அகற்றுவதாக. | கட்டிடத்தை உடைத்தகற்றும் போது சொத்துக்களின் கணக்கீட்டு கிரய பெறுமதியை கணக்குகளிலிருந்து அகற்ற வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 553,741 ஆனதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,698,546 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 1,730,264 ஆன நிலுவை வீதவரியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 1946 இலக்கம் 30 கொண்ட குத்தகை மற்றும் மதிப்பீட்டு சட்டத்தின் 20 பிரிவின் பிரகாரம் வீதவரி சொத்துக்கள் 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை மதிப்பீடு செய்ய வேண்டுடிய போதும், அதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தில் ஒரு பகுதியை அறவிட்டுள்ளதாகவும், மேலதிக ஊழியர் ஒருவரையும் ஈடுபடுத்தி பணம் அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 90,729 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதியை அறவிட இயலாதிருந்தது. | ஆரம்ப உரிமையாளர்களை கண்டறிய முடியாதுள்ளதாகவும், மேலும் கண்டறிந்து அறவிட அல்லது பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |
| (ஆ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | | |
| | 1988 இலக்கம் 56 மற்றும் 2000 இலக்கம் 53 கொண்ட சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இலக்கம் 47 கொண்ட தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணம் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டுமென 2020 ஆண்டில் இனங்கண்டிருந்த 122 நிறுவனங்கள் 2020 ஒக்டோபர் அளவிலும் அனுமதிப்பத்திரங்களை பெறாததால் சபைக்கு ரூபா 442,600 ஆன வருமானம் இழக்கப்பட்டுள்ளதுடன், அவ்வியாபாரங்களினூடாக இடம்பெறும் சுற்றாடல் தாக்கம் தொடர்பாக காலரீதியாக ஆய்வொன்றை மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அனுமதிப்பத்திர செயன்முறையை ஒழுங்காக பேணிச் செல்ல அனைத்து முயற்சிகளையும் எடுப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |
| (இ) | ஏனைய வருமானம் | | |
| | 2016 ஆண்டு முதல் சபைக்கு சொந்தமான 05 நீர் கருத்திட்டங்களிற்குரிய 110 நுகர்வோர்களிடமிருந்து அறவிட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 1,086,188 ஆன நிலுவை நீர் கட்டணத்தை மீளாய்வாண்டினுள் அறவிட போதிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | பட்டியல்களிற்கு செலுத்தாத நுகர்வோர்களின் நீர் விநியோகத்தை துண்டிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகவும், 44 நீர் சேவைகளை துண்டித்துள்ளதாக. | நிலுவை நீர் கட்டணத்தை அறவிட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் | | |
| | மாகாணசபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்து மீளாய்வாண்டு இறுதியில் பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,329,887 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 3,075,300 இனை அறவிட இயலாதிருந்தது. | முத்திரைக் கட்டண அட்டவணையை தயாரித்துக் கொண்டிருப்பதாகவும், நீதிமன்ற தண்டப்பணத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாகவும். | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 1978 இலக்கம் 41 கொண்ட நகர அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 10(6) பிரிவின் பிரகாரம் கட்டிட அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் ஒன்றின் கால எல்லையை நீடிப்பது 02 வருட உச்ச காலம் வரை நீடிக்கும் சந்தர்ப்பத்தை தவிர அபிவிருத்தி அனுமதி பத்திரமொன்றின் ஏற்புடைய காலம் ஒரு வருட காலத்திற்கு மாத்திரம் செல்லுபடியாகும். அவ்வாறாயினும், 2016 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான காலத்தினுள் சபையினால் அங்கீகரித்த 102 கட்டிட திட்டங்களிற்காக 14 சாத்தியப்பாட்டு சான்றிதழ்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டு இருந்தன. | புதிய நிர்மாணமொன்று தொடர்பாக சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டுமென பொது மக்களை அறிவூட்டியதாகவும், எதிர்காலத்தில் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதாக. | 02 வருட காலத்தை விஞ்சிய அனுமதித்த கட்டிடங்களை பரிசோதித்து சாத்தியப்பாட்டு சான்றிதழ்களை விநியோகிக்க வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மாகாண வீதி அபிவிருத்தி, கிராம உட்கட்டமைப்பு, சுற்றுலா, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்திய தலகஸ்கந்த மைதானத்தை அபிவிருத்தி செய்யும் - II ஆம் கட்ட வேலையின் தொழிநுட்ப உத்தியோகத்தரின் வேலை மதிப்பீட்டின் வேலை விடயம் 1.01 இன் பிரகாரம் மைதானத்தை நிர்மாணிக்கவுள்ள காணியின் 06 அங்குல மேல் மண்ணை அகற்றி வேலைத் தளத்தின் சுட்டிக் காட்டும் இடத்திற்கு கொட்டுவதற்காக 2288 வர்க்க மீட்டர்களுக்கு ரூபா 431,768 தொகை 2020 திசெம்பர் 29 திகதி அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2021 மார்ச் 04 திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது அபிவிருத்தி செய்த காணியில் மேல் மண் அகற்றிய இடங்களை தொழிநுட்ப உத்தியோகத்தரினால் காட்ட முடியாததன் மூலம் மேற்கொள்ளப்படாத செயல்களிற்காக மேலே குறிப்பிட்ட பணம் செலுத்தப்பட்டுள்ளமை வெளிப்படையானது. | மேல் மண் அகற்றுதல் பௌதீக ரீதியாக மேற்கொண்ட செயலாகவும், பௌதீக பரிசோதனை மேற்கொள்ளும் போது குறித்த இடம் பற்றைக் காடுகளினால் முடப்பட்டிருந்ததால் தென்படவில்லை என. | பௌதீக ரீதியாக மேற்கொள்ளப்படாத செயல்களிற்காக செலுத்திய பணத்தை மீண்டும் அறவிட வேண்டும். |